(2) *Calling Attention to Increase in Prices of Coconuts in Tamil Nadu*

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து வட மாநிலங்களுக்குத் தேங்காய் ஏராளமாக திடீரென்று விற்பனை செய்யப்படுவதால், தமிழ் நாட்டில் தேங்காய் விலை மிக அதிகமாக உயர்ந்துகொண்டிருப்பதால், மக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதை அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக மாண்பு மிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU P.U. SHANMUGHAM : Mr. Deputy Chairman, the major coconut producing districts in the State are Thanjavur, Kanyakumari, Coimbatore, Tiruchirapalli, Madurai and Salem in the order of importance. In addition, supplies are received from Kerala and Mysore States. There is consumer preference in Madras City for medium and big size nuts imported from other States and there is export of the smaller sized nuts produced within the State to Northern States. On an average, about 70 lakhs of nuts are received per month in the City of which 25 lakhs are exported.

The drought conditions that prevailed in earlier years have had an adverse yield on the trees. Further, the arrivals in Madras City from Andhra Pradesh were affected due to the damage caused by cyclone and floods in that State. Late rains in Thanjavur district also affected the yield of coconuts. This had resulted in an upward trend in the prices from November—December, 1969. It is, however, expected that the favourable seasonal conditions of 1969-70 would result in improved yields and, therefore, the prices would come down hereafter. A downward trend has been noticed from July onwards during which period the wholesale price has come down to Rs. 600/- from Rs. 700/- for 100 nuts of medium size.

The State Government have exempted with effect from 18-3-1970 coconut from the liability to pay sales tax, earlier levied at 5% single point, at the point of first purchase.

(3) *Calling attention to hardship caused to teachers on account of Denial by some managements of the privilege of continuity of service to the end of school year*

*THIRU A. R. DAMODARAN : Mr. Deputy Chairman, I wish to call the attention of the Hon. the Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the denial (by some managements) of the privilege conferred so far of continuity of service to the end of the school year, to teachers completing their 60th year of age in the middle of the current school year and the consequent hardship caused to such teachers.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது மானிய உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 60; மானிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் 58, ஆண்டுதோரும் ஆணைகள் பிறப்பித்து ஆசிரியர்களை 60 வயது வரை பணியில் நீடிக்கச் செய்வதற்கு, மானிய உதவி பெறும் பள்ளி நிர்வாகிகளுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. செயலில் உள்ள ஆணைகளின்படி பள்ளிக் கல்வியாண்டின் நடுவே, ஓய்வு பெறும் வயதான 58 வயதோ அல்லது 60 வயதோ அடைகின்ற எந்தவொரு ஆசிரியரும், பள்ளி அவ்வாண்டு இறுதியில் கோடை விடுமுறைக்காக மூடப்படுகின்ற நாள்வரை, மறு நியமன நிபந்தனைகளின் கீழ் பணியில் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இந்த மறு நியமனம் வழக்கமான வரையறைகளுக்குட்பட்டதாகும்; அதாவது, அவரது பணியும் நடத்தையும் மனநிறைவளிப்பதாக விருக்க வேண்டும். அவர் பணியில் நீடிப்பதற்கு உரிய உடல் நலம் பெற்றிருக்க வேண்டும். இதற்கு அரசின் முன்னனுமதியெதுவும் வேண்டியதில்லை. இந்த ஆணைகள் தொடர்புடைய அனைவரது நாட்டத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், மானிய உதவிபெறும் நிர்வாகங்களின் கீழ் 60 வயதுக்கு மேலும் பணியில் வைத்துக்கொள்ளப்படுகின்ற ஆசிரியர்கள் குறித்து அளிக்கப்படும் ஆசிரியர் மானியத்தை மதிப்பிடுவதற்கு, மானிய உதவி விதிகள் தொகுப்பில் அடங்கியுள்ள விதித்துறைகள் தளர்த்தப்பட வேண்டும். அரசு அளித்த இவ்விதித்துறைத் தளர்வு 1969-70 பள்ளியாண்டின் இறுதியில் முடிவடைந்தது. எனவே, 60 வயதுக்கு மேலும், சில ஆசிரியர்கள் இவ்வாண்டில் பணியில் நீடித்திருக்க அனுமதிக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில் மானியங்கள் மதிப்பிடப்படாது இருக்கலாம். பள்ளிக் கல்வியாண்டு நடப்புக்காலத்தில் 60 வயதை அடைகின்ற ஆசிரியர்களுக்கு மானியம் வழங்க இயலுமாறு, மானிய உதவி விதித்தொகுப்பு விதிகளை, 1970-71-இலிருந்து 1972-73 முடிய மேலும் மூன்று ஆண்டுகளுக்குத் தளர்த்துவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். இயக்குநரது பரிவுரைகளை ஏற்றுக்கொண்டு, அரசின் ஆணைகள் தனியே பிறப்பிக்கப்பட விருக்கின்றன.

VII. GOVERNMENT RESOLUTIONS

(1) *Disclosure of Assets of Members of the Legislature*

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Deputy Chairman, Sir, I beg to move—

"That, in the form appended to the Government Resolution on the Disclosure of Assets of Members of the Legislature in paragraph (2) under the heading, "Procedure for furnishing the Return,"

For the figure and word "30th April", the figure and word "30th September" shall be substituted."